விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 068 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 13 செவ்வாய்க்கிழமை (25.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### 4 நாட்களில் 8 கொலைகள்!

## நாட்டுக்கு அச்சுறுத்தல் இல்லையென்கிறார் அநுர

### சபையில் சஜித் விசனம்



(கொழும்பு)

4 நாட்களில் 8 படுகொலைச் சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றுள்ளன. ஆனால் 15ஆம் பக்கம் பார்க்க

### வீடுகளைக் கொளுத்தி

## ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் இல்லை - நாமல்



(கொழும்பு)

"வீடுகளைக் கொளுத்தி அரகலய மூலம் ஆட்சியைப் பிடிக்கும் எண்ணம் எம்மிடம் இல்லை. ஜனநாயக வழியிலேயே எமது அரசியல் பயணம் தொடரும்" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப் 15ஆம் பக்கம் பார்க்க

### கணேமுல்ல சஞ்சீவ படுகொலை

# நீதித்துறை அதிகாரிகள் விசாரிக்கப்படுவார்கள்

### ஆளும் கட்சியின் பிரதம கொறடா நளிந்த



(கொழும்பு)

நீதிமன்றத்துக்குள் கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதித்துறையைச் சேர்ந்த பல அதிகாரிகள் விசாரிக்கப்படுவார்கள் என ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் வாகன விபத்து

#### இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில் 400 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

11ஆம் பக்கம் பார்க்க

### 3 ஆயிரம் நாளாக தொடரும் உறவுகளின் போராட்டம்





15ஆம் பக்கம் பார்க்க

### அநுர அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சிற்கு 15ஆம் பக்கம் பார்க்க



## பதில் பொலிஸ்மா அதிபருக்கு சஞ்சீவ படுகொலையுடன் தொடர்பா?

### உதய கம்மன்பில கேள்வி



(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கும் தொடர்பிருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுகிறது. எனவே தகவல் கிடைத்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய பதில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் 15ஆம் பக்கம் பார்க்க

### குரங்கு குறுக்கே பாய்ந்ததில்

## மோ.சைக்கிள் விபத்து

#### பெண் உயிரிழப்பு : முல்லையில் சம்பவம்



(முல்லைத்தீவு)

குரங்கு ஒன்று வீதிக்கு குறுக்கே பாய்ந்ததில் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07.06.1943

விண்ணில் 10.03.2021

## நாகநாதர் சிவஞானம் (ராசா)

ஏழாலை மேற்கு, புளியங்கிணற்றடி, சுன்னாகம்.

ஆண்டுகள் நான்கு ஆனதே அப்பா ஆனாலும்.....
பாசமது விலகாத – பாரினிலே
உங்களைப் போன்ற – இளவயதிலும்
கடமை தவறாத கண்ணியம் குலையாது – எம் தாயை இழந்தும்
இள வயதினில் எமக்காக உமையே
அர்ப்பணித்து கோடுபோட்டு வாழ்ந்த வாழ்வினையே – எமையும்...
கோடு தவறாமல் வாழ வழி காட்டிய தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

(C-2332)

இல.76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

*என்றும் நினைவுகளுடன்*
பிள்ளைகள்

## நீதித்துறை...

பாராளுமன்றத்தில் சஞ்சீவ படுகொலை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் சஞ்சீவ கொலை தொடர்பில், பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸாருடன் தொடர்புடைய சிலரை ஏற்கனவே கைது செய்துள்ளதாகவும் அரசாங்கம் இந்தச் சம்பவத்தை இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

(ம-7)

## கணனித் தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம்
ஒன்றிற்கு கணனித் தட்டெழுத்தாளர் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(3515)

தொடர்பு : 077 129 9519

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கில்
24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி.
- பலாலி வீதியில் இருந்து 1Km தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ஊரெழு கிழக்கு முருகன் வீதி முன்பாக.
- செம்மண் இருபது அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை பத்து லட்சம் (10,00000/= ரூபா).

(3516)

தொடர்புகளுக்கு :
077 468 3354, 077 288 0152

## மரண அறிவித்தல்



மண்ணில் உதிர்வு 25 - 03 - 1979

விண்ணில் மறைவு 22 - 02 - 2025

## தம்பித்துரை சுதர்சன்

நரிகிண்டி கரணவாய் தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சுதர்சன் அவர்கள் (22.02.2025) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் தம்பித்துரை ( முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் - அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை) - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சுதாகரன் (லண்டன்), ராஜதாரணி (சிங்கப்பூர்), ரம்மியா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகராணி (லண்டன்), மோகனதாசன் (சிங்கப்பூர்), ரவீந்திரகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் சுபானு, சுவஸ்திகா, ஹரிஷ் சஞ்சய் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் மேனுஜா, மதுரிஜா, யஸ்ணவிகா, தக்ஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2025) செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பூவரசந்திட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ராஜிஅகம்',
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(881)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மண்ணில் 05 - 04 - 1950

விண்ணில் 24 - 02 - 2025

## கந்தையா நடராசா

குடத்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா அவர்கள் நேற்று 24.02.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா புஸ்பராணியின் அன்புக் கணவரும் புஸ்பரஜனி(முன்பள்ளி ஆசிரியர்), புஸ்பரதி, புஸ்பவதனா(பொறுப்பு அஞ்சல் அதிபர் - தாளையடி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாபரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), மதியழகன்(காவலாளி) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்சினி, தருக்சிகா, அருட்சிகா, அனுகீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடத்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடத்தனை கிழக்கு,
குடத்தனை.

(C-2331)

*தகவல் :*
குடும்பத்தினர்
076 831 1055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் மீதான மக்களின் எதிர்பார்ப்பு அதிகரிப்பு

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**அரசாங்கம் மீது பொதுமக்களின் எதிர்ப்பார்ப்பு தேர்தலுக்குப் பின்னர் வேகமாக அதிகரித்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.**

அதன்படி, கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில், 24 வீதமாக காணப்பட்ட, அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் எதிர்ப்பார்ப்பு தற்போது 62 வீதமாக அதிகரித்துள்ளது.

"நாடு எண்ணும் விதம்" என்ற தொனிப்பொருளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் புதிய பெறுபேறுகளின் அடிப்படையில் இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக வெரிட்டே ரிசர்ச் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 7 வீதமாகக் காணப்பட்டதாகவும் இவ்வாண்டில் அது 62 வீதமாக அதிகரித்துள்ளமையை குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக எடுத்துக் கொள்ளமுடியும் எனவும் வெரிட்டே ரிசர்ச் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு முதல் முறையாக, பெரும்பான்மையான மக்கள், அதாவது 55 வீதமானோர், இலங்கையின் பொருளாதார நிலைமை மேம்பட்டு வருவதாக நம்புவதாக வெரிட் ரிசர்ச் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

எனினும் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரம் இன்னும் பலவீனமான நிலையில் இருப்பதாக 47 வீத மக்கள் நம்புவதாக வெரிட் ரிசர்ச் தெரிவித்துள்ளது. (நி-8)

## சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தல்
## சட்டத்தரணிகள் சங்கம் கவலை

(கொழும்பு)

பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேக நபர்கள் அண்மைய நாட்களில் கொல்லப்பட்ட சம்பவங்களால் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அறிக்கையொன்றை வெளியிட்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்திற்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்தபோது சந்தேக நபர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், கடந்த 21 ஆம் திகதி இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் காவலில் இருந்த போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர்.

இவ்வாறான சம்பவங்களால் சட்ட அமைப்புகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்பதால் அவற்றைத் தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (நி-8)

## ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டால்
# அரசிற்கு சவாலானதாக அமையும்
### பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிக்கப்படுமாயின் அரசிற்கு சவால் மிக்கதாக அமையும் என பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் பேராசிரியர் வசந்த அதுகோரல தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரச மற்றும் தனியார்துறை சேவையாளர்களின் சம்பள அதிகரிப்பு எதிர்காலத்தில் பணவீக்க அதிகரிப்புக்கு ஏதுவானதாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விடயத்தை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே பேராசிரியர் வசந்த அதுகோரல கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வரவு செலவுத் திட்டத்தில் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக அரச சேவைக்கு 30 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரணிகளால் எதிர்காலத்தில் பணவீக்கம் அதிகரிக்கக்கூடும் என பேராசிரியர் வசந்த அதுகோரல எச்சரித்துள்ளார். இதே வேளை, ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக தற்போது 500 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது. எதிர்காலத்திலும் ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்படுமாயின் அதுவும் அரசிற்கு சவால் மிக்கதாக அமையும்.

உற்பத்தித் துறையின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு புதிய திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் உற்பத்தித் திறனை மேம்படுத்த சிறந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை சிறந்த முறையில் செயற்படுத்த வேண்டுமென அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் பேராசிரியர் வசந்த அதுகோரல தெரிவித்துள்ளார். (நி-8)

## அதிகரிக்கும் சூட்டுச் சம்பவங்களால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும் அபாயம்!

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் காரணமாக சுற்றுலாத்துறை மீண்டும் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர சுற்றுலாக் கைத்தொழிற்துறையினரின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான சுற்றுலாத் தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் சமிர சேனக டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் பல பகுதிகளில் தற்போது துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இது சுற்றுலாத்துறைக்கு நேரடியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.


இந்த சம்பவங்களால் வீதியில் சுதந்திரமாக செல்வதற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே, சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதில் இது நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடும்.

நாட்டுக்குவரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தொடர்ச்சியான துப்பாக்கிச் சூடு காரணமாக குற்ற வலையமைப்பு ஒழுங்கமைக்கப்படவில்லையாயின் நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய நெருக்கடிக்கு உள்ளாகக்கூடும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான சுற்றுலாத் தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் சமிர சேனக டி சில்வா தெரிவித்துள்ளார். (நி-8)

### பாதுகாப்பு படைகளில் இருந்து
## தப்பியோடியவர்களை கைது செய்யுமாறு அதிரடி உத்தரவு



(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளில் இருந்து தப்பியோடியவர்களை உடனடியாக கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்கள் தொடர்பில் பாதுகாப்புச் சபை நேற்றுக் காலை ஆராய்ந்தது.

இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்ய கொந்தா குறித்த பணிப்புரையை விடுத்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# 'நான் இருக்க பயமேன்'-கோலி சதம்; பாகிஸ்தானை பந்தாடியது இந்தியா



பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி தொடரில் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பட்டிங்கைத் தேர்வு செய்து முதலில் விளையாடியது.

பாகிஸ்தான் அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக இமாம் உல் ஹக் மற்றும் பாபர் அசாம் களமிறங்கினர். இந்த இணை பாகிஸ்தானுக்கு சிறப்பான தொடக்கத்தை கொடுக்கவில்லை.

பாபர் அசாம் 23 ரன்களிலும், இமாம் உல் ஹக் 10 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இதனையடுத்து, கப்டன் முகமது ரிஸ்வான் மற்றும் சௌத் ஷகீல் ஜோடி சேர்ந்தனர்.

சௌத் ஷகீல் 62, கப்டன் முகமது ரிஸ்வான் 46 ரன்கள் எடுத்து இருவரும் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் களமிறங்கியவர்களில் குஷ்தில் ஷாவைத் தவிர மற்ற வீரர்கள் யாரும் பெரிய அளவில் ரன்கள் சேர்க்கவில்லை.

இறுதிக்கட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய குஷ்தில் ஷா 39 பந்துகளில் 38 ரன்கள் எடுத்தார்.


இறுதியில் பாகிஸ்தான் அணி 49.4 ஓவர்களில் 241 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 3 ஹார்திக் பாண்டியா 2 அக்ஷர் படேல், ஹர்ஷித் ராணா மற்றும் ரவீந்திர ஜடேஜா தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

242 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இந்திய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக கப்டன் ரோஹித் சர்மா மற்றும் ஷுப்மன் கில் களமிறங்கினர். அதிரடியாக தொடங்கிய ரோஹித் சர்மா 20 ரன்கள் எடுத்து ஷாகின் ஷா அஃப்ரிடி பந்துவீச்சில் போல்டானார்.

அதன் பின், ஷுப்மன் கில் மற்றும் விராட் கோலி இருவரும் ஜோடி சேர்ந்தனர்.

இந்த இணை அபாரமாக விளையாடியது. இருப்பினும், ஷுப்மன் கில் 46 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதனையடுத்து, விராட் கோலியுடன் ஸ்ரேயாஸ் ஐயர் ஜோடி சேர்ந்தார்.


இந்த இணை அபாரமாக விளையாடி ரன்கள் சேர்த்தது. ஸ்ரேயாஸ் ஐயர் 56 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். களமிறங்கியது முதலே சிறப்பாக விளையாடிய விராட் கோலி சதம் விளாசி அசத்தினார். அவர் 111 பந்துகளில் 100 ரன்கள் எடுத்து கடைசி வரை களத்தில் இருந்தார். அதில் 7 பவுண்டரிகள் அடங்கும்.



இறுதியில் இந்திய அணி 42.3 ஓவர்களின் முடிவில் இலக்கை எட்டி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் விளாசிய விராட் கோலிக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது. (6-8)

# டுபாய் மைதானத்தில் குவிந்த பிரபலங்கள்




இந்தியா பாகிஸ்தான் போட்டி என்றாலே கிரிக்கெட் இரசிகர்கள் மைதானத்திற்கு சென்று நேரில் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். நேரில் செல்ல முடியாதவர்கள் எப்படியாவது டிவிகளிலும், ஒடிடி தளங்களிலும் கண்டு களிப்பது வழக்கம்.

இந்நிலையில் சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின

போட்டியை நேரில் காண திரைப்பட பிரபலங்கள் மற்றும் கிரிக்கெட் பிரபலங்கள் உள்ளிட்டோர் டுபாய் சர்வதேச மைதானத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிரிக்கெட் பிரபலங்களான ஜஸ்பிரித் பும்ரா, திலக் வர்மா, அபிஷேக் சர்மா, சூர்யகுமார் யாதவ், ஷாஹித் அஃப்ரிடி மற்றும் இமாத் வாசிம்.



திரைத்துறை பிரபலங்களான நடிகர் ஜீவா, இயக்குநர் வெங்கட் பிரபு, நடிகர் சிரஞ்சீவி, பாலிவுட் ஹீரோயின் சோனம் கபூர் அவருடைய கணவரான ஆனந்த் அஜுஜா, புஷ்பா திரைப்படத்தின் இயக்குநர் சுகுமார் அவருடைய குடும்பத்துடன் வருகை தந்திருந்தனர்.

போட்டியை எம்.எஸ்.தோனி விளம்பரப் படப்பிடிப்பு தளத்தில் அந்த படபிடிப்புக் குழுவினருடன் அமர்ந்து பார்த்த புகைப்படங்கள் இணையத்தளத்தில் ட்ரெண்ட் ஆகி வருகிறது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியமைச்சின் 176 வாகனங்கள் தொடர்பில் தகவல் இல்லை

## தேசிய தணிக்கை அலுவலகம் அறிக்கை

(கொழும்பு)

நிதி அமைச்சகத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 257 வாகனங் களில் 176 வாகனங்களின் இருப்பை உறுதி செய்ய முடியவில்லை என தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்ட தணிக்கை அறிக்கை தெரிவித்துள்ளது.இவற்றில் 99 வாகனங்களின் எந்தவொரு தகவலும் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

நிதி அமைச்சகத்தின் பெய ரில் பதிவு செய் யப்பட்ட அனைத்து வாகனங்களின் இருப்பு மற்றும் உரிமையை சரி பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தணிக்கை பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை இந்த 176 வாகனங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சகத்தின் தலைமை கணக்கியல் அதிகாரி தணிக்கைக்கு தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல்- 2023 ஆம் ஆண்டுக்கான நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. (நி-8)

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 03 - 1949

மறைவு 23 - 02 - 2025



### திருமதி.ஜேசுதாசன் மேரிமெற்றலின்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ஜேசுதாசன் மேரிமெற்றலின் 23.02.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப்- அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜேசுதாசன் (ஆயுர்வேத வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும் தெலஸ்போ, பெனடிற், லூர்துமேரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரிரதிவதனா(புத்தளம்) காலஞ்சென்ற டெய்சி, றொபேக்கா (சுவீடன்), மேரிசாளினி (உடுப்பிட்டி), மேரிறஜனி(சுவிஸ்), மேரிடொனால்ஸ்(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமல்(புத்தளம்), ரஞ்சன்(சுவீடன்), நிகால் டிக்ஷன் (உடுப்பிட்டி), நிக்ஷன்(சுவிஸ்),சுரேஸ்(இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், றோகித், ஷானியா (சுவீடன்), அஸ்மிதா(உடுப்பிட்டி), ஷர்விக், பிறின்ஷிகா(சுவிஸ்), நொயல், டெனிஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.02.2025 நாளை புதன்கிழமை காலை 09.30 மணியளவில் உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வல்வை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் -குடும்பத்தினர்
T.P 077 138 1500
077 910 7248

உடுப்பிட்டி

## 31 ஆம் நாளில் நினைவு கூருகிறோம்

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் திருமதி.சிவரஞ்சினி சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர். சுப்பிரமணியம் சிவானந்தன்



அவர்கள் 26.01.2025 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் 31 ஆம் நாளில் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

## கண்ணீர் காணிக்கை

எமது பாடசாலை அதிபர் திரு.சு.புஸ்பராங்கன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். திருமதி.புஸ்பகாந்தி சுப்பிரமணியம்



தோற்றம் 1946.01.04

மறைவு 2025.02.22

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவில் துயர் பகிரும் - ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயம்

## இராசிபலன்

25.02.2025
மாசி 13, செவ்வாய்க்கிழமை
துவாதசி முற்பகல் 11.06 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 5.09 மணிவரை
சுபநேரம் 10.59-12.29 மணிவரை
இராகுகாலம் 3.29-4.59 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்.

வளவன்

**மேஷம்** செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**துலாம்** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**மகரம்** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழிலில் நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும் நாள், பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், பாராட்டும் புகழும் கூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தொழிலில் சில மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**கன்னி** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

பெரிய துன்பம் சிறிய துன்பங்கள் மறக்கடிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு புலம்பெயர் வாழ் நண்பர்களின் அனுசரணையில் நகுலேஸ்வரன் விஜயசன் ஞாபகார்த்தமாக இரத்த தானமுகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்- சிவசாந்தன்)



யா/ கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் ஜ.தேவராஜன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்- சுபேசன்)

# மகா சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம்-தொல்புரம் கிழக்கு ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆதிசிவகுகன் குருக்கள் அறிவித்துள்ளார். (6-8)

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு பழைய வீதியில் அமைந்துள்ள ஸ்ரீசுப்ர முனிய கோட்ட ஸ்ரீ சாந்தி லிங்கப் பெருமான் திருக் கோயில் மகாசிவ ராத்திரி விழா நாளை புதன்கிழமை இடம் பெறவுள்ளது.காலை 8.30 மணிக்கு யாக பூஜையும் 9.30 மணிக்கு பாற்குட ஊர்வலமும் 10 மணிக்கு விசேட அபிஷேக பூஜை வழிபாடும் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இரவு நான்கு சாமமும் விசேட அபிஷேக பூஜை வழிபாடுகளும் நடைபெறும். (6-8)

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் மகாசிவராத்திரி நிகழ்வு நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 6.30 மணிக்கு அபிஷேகத்தை தொடர்ந்து 4 ஜாமப் பூசைகளும் நடைபெற்று அம்பாள் உள்வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.இந் நிகழ்வில் புல்லாங்குழல், வய்லின், காவடியாட்டம், கோலாட்டம், குதிரை யாட்டம், இசைக்கச்சேரி மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆன்மிக சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது என தேவஸ்தான பரிபால சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

# 4 பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக சிறீபவனந்தராஜா எம்.பி நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் 4 பிரதேச செயலக பிரிவுகளின் ஒருங் கிணைப்புக் குழு தலைவராக பாரா ளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ்.சிறீபவானந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவிக்கான நியமனத்தினை ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிறீபவானந்த ராஜாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வலி வடக்கு, சங்கானை, சண்டிலிப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (6-8-33)

# நல்லூர் பிரதேச சபை ஏலவிற்பனை அறிவித்தல்


**இடம்:** தலைமை அலுவலகம் - நல்லூர் பிரதேச சபை.
**காலம்:** 06.03.2025 வியாழக்கிழமை மு.ப 10.30
**ஏலப்பொருட்கள்:** பாவித்த அலுவலக தளபாடங்கள், அலுமாரிகள், கழிவு ஒயில், வாகன ரயர்கள், பாவித்த பற்றிகள் ஆகியவை.

ஆர்வம் உள்ளோர் ஏல விற்பனைப் பொருட்களை 04.03.2025ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம். ஏலதாரர் கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்து மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ளமுடியும். (மு.ப 8.30 - 10.15 மணி வரை மட்டுமே விண்ணப்பப்படிவம் வழங்கப்படும்) ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அதற்கான பெறுமதியை உடன் பணமாக செலுத்தி அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னரே பொருட்களை அலுவலகத்தில் இருந்து எடுத்து செல்லுதல் வேண்டும்.

**செயலாளர், நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
**021 222 2700**

(சி-2325)

# கண்ணீர் அஞ்சலி



கிளி/பளை மத்திய கல்லூரியின்
ஆசிரியை **திருமதி. தாரணி சாந்திக்குமார்**
அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்.
**சிவபாதசுந்தரம் இந்திரகுமாரி**

மலர்வு 25.12.1952
உதிர்வு 22.02.2025

அவர்கள் 22.02.2025 அன்று இறைபதம் அடைந்தமையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஊழியர் நலன்புரிச்சங்கம்
கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை

## பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 25.02.2025 தொடக்கம் 11.03.2025 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 12.03.2025 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 12.03.2025 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 2. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 3. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 12.03.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்தி தரகுத்தகைதாரருக்கு. ஒருவருக்கு (இங்கு ஒருவர் என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும்) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.
8. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும்.
9. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.


மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி.த.தர்சினி, செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.** (சி-2326) **25.02.2025.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீரை வீண்விரயம் செய்ய வேண்டாம்!

## தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை கோரிக்கை



(கொழும்பு) —

**குடிநீரை வீண்விரயம் செய்யாது சிக்கனமாக பாவிப்பது அனைவரதும் பாரிய பொறுப்பாகும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.**

அதிக மழையுடனான காலநிலையினை அடுத்து நாட்டில் தற்சமயம் அதிக வெப்பநிலையுடனான வரட்சியான காலநிலை நிலவுகின்றது.

வெப்பத்தின் தாக்கம் காரணமாக மக்களின் அன்றாட நீர்ப் பாவனை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. அத்துடன் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைய ஆரம்பித்துள்ளது.

அவ்வாறான நிலையில் குடிநீர் விநியோகம் வரையறுக்கப்பட்டுள்ளதோடு, அனைவருக்கும் தேவையான குடிநீரையும் பொது வசதிகளுக்குத் தேவையான நீரையும் வழங்க வேண்டிய பாரியதொரு பொறுப்பு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு உள்ளது.

இந்நிலையில் உயர்ந்த பிரதேசங்களில் உள்ள பாவனையாளர்களுக்கு குறைவான நீர் கிடைக்கும் நிலைமை ஏற்படும் என்பதால், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிக பட்ச நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எனவே இந் நிலைமையினை கருத்தில் கொண்டு வாகனங்கள் கழுவுதல் மற்றும் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கைகளுக்கும் பூச்செடிகளுக்கும் குடிநீரைப் பயன்படுத்துவதில் மிகுந்த அவதானம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

# செவ்வந்தி வெளியேறவில்லை

## பொலிஸார்



(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய தற்போது தேடப்பட்டு வரும் பெண்ணின் மற்றுமொரு புகைப்படம் வெளியாகியுள்ளது.

இஷாரா செவ்வந்தி எனப்படும் குறித்த பெண் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை என்ற தகவல் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் மத்துகம பகுதியில் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு சிறப்புத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு வெளியேறி விட்டார் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Dip in English, Business<br>எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்<br>தொ.இ: B/15158 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: AAT, London<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15189 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 37 1/2<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Bsc,QS(PVT)<br>எதிர்பார்ப்பு : படித்த தகுதியான பெண்<br>தொ.இ: B/15159 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 65<br>8 இல் சூரி செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L,தையல்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/15195 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 17 ½<br>8 இல் செவ்<br>உயரம் : 5'9"<br>தகைமை/தொழில்: பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி, தகுதியான பெண்<br>தொ.இ: B/15160 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 7 3/4<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:BSc, Research Assistant<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு, PRஉள்ளவர்<br>தொ.இ: G/15197 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## பெயர்மாற்ற அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மத்தாளோடையில் வதியும் உதயகுமாரன் தான்ஸ்குமார் ஆகிய நான் 25.02.2025 இன்று தொடக்கம் எனது பெயரை உதயகுமாரன் சாரங்கன் எனப்பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனி வரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் இப்பெயரினையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
உதயகுமாரன் சாரங்கன்

(3504)



## வலி.கிழக்கு (தென்பகுதி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி சங்கக் கட்டிடங்கள் வாடகைக்கு

எமது சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் வாடகைக்கு விடப்படவுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு

1. கோப்பாய் வீரபத்திரர் கோயிலடி - அகலம் 32 அடி, நீளம் 115 அடி
2. இருபாலைச் சந்தி கிளை இலக்கம் 33 இன் மேல் மாடி - அகலம் 17 அடி, நீளம் 37 அடி
3. உரும்பிராய் சந்தி கிளை இலக்கம்23- அகலம் 32 அடி, நீளம் 32 அடி
   இதில் கட்டிடம் சரி சமனாக இரண்டாகப் பிரித்து வழங்கப்படும் 16X16 அடி
4. உரும்பிராய் உப மொத்த நிலையம் - கீழ்தளம் - அகலம் 43 அடி, நீளம் 48 அடி
5. உரும்பிராய் உப மொத்த நிலையம் மேல் மாடி - அகலம் 37 அடி, நீளம் 75 அடி
6. கோப்பாய் கிராமிய வங்கி அருகாமை கட்டிடம் - அகலம் 10 அடி, நீளம் 30 அடி
7. கோப்பாய் வெண்காயச் சங்கக் காணி, கட்டிடம்
8. கோப்பாய் கிராமிய வங்கிமேல் தளம்
9. ஊரெழு கிளை இலக்கம் 30 இன் வடக்குப் பக்க வெறும் காணி- அகலம் 27 அடி, நீளம் 50 அடி

மேற்கூறப்பட்ட கட்டிடம், காணி என்பவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ள விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 08.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு மூடிய தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு நீர்வேலி.
தொலைபேசி இலக்கம்-021 205 4814

பொது முகாமையாளர் 25.02.2025


(3510)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# பேருந்து-பாரவூர்தி மோதி விபத்து!

- 14 பேர் உயிரிழப்பு
- 6 பேர் காயம்
- நைஜீரியாவில் சோகம்



(நைஜர்)

நைஜீரியாவின் நைஜர் மாகாணத்தில் பேருந்து ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

குசோபோகி பகுதிக்கு அருகில் நேற்று, 30 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று முன்னால் பய ணித்துக்கொண்டிருந்த பாரவூர்தியை முந்திசெல்ல முற்பட்ட வேளையில் பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாரவூர்தி மீது மோதியுள்ளது .

இதன் காரணமாக குறித்த பேருந்து தீப்பிடித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் சில மணி நேர போராட்டத்திற்கு பின் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

குறித்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# ஜேர்மன் தேர்தலில் எதிர்க்கட்சிக்கு வெற்றி

(பேர்லின்)

ஜேர்மனியில் நடந்த பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியான கென்சவேர்ட்டிவ் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, எதிர்க்கட்சித் தலைவரான பிரெட்ரிக் மெர்ஸ் பதவியேற்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய ஒரு அரசாங்கத்தை அமைக்கத் தயாராகும் போது, ஐரோப்பாவிற்கு அமெரிக்காவிடமிருந்து "உண்மையான சுதந்திரத்தை" வழங்க உதவுவதாகவும் பிரெட்ரிக் மெர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

ஐரோப்பாவின் மிகப் பெரிய பொருளாதாரம் நலிவடைந்துள்ள நிலையில், அதன் சமூகம் இடப்பெயர்வு காரணமாக பிளவுபட்டு, அதன் பாதுகாப்பு மோதலில் ஈடுபடும் அமெரிக்காவிற்கும் உறுதியான ரஷ்யா மற்றும் சீனாவிற்கும் இடையில் சிக்கியுள்ள நிலையில், பிரெட்ரிக் மெர்ஸ் முன்னர் பதவியில் அனுபவம் இல்லாத நிலையில், ஜனாதிபதியாக பொறுப்பேற்க உள்ளார்.

ஜேர்மனியில் ஒலாப் ஸ்கால்ஸ் தலைமையிலான சமூக ஜனநாயகக் கட்சி ஆட்சியில் இருந்தது. கடந்த ஆண்டு நவம்பரில் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவரான நிதி அமைச்சரை சொன்சலர் ஒலாப் ஸ்கால்ஸ் திடீர் பதவி நீக்கம் செய்தார்.

இதையடுத்து நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசு தோல்வியுற்றதை தொடர்ந்து பொதுக் தேர்தல் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மீண்டும் மூளும் அ

- போர் நிறுத்த பேச்சுவார்த்தையை
- படைகளைத் தயார் நிலையில் இ

(ஜெருசலேம்)

**இஸ்ரேலுடனான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை ஹமாஸ் தரப்பு இரத்து செய்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இஸ்ரேலியர்களின் உடல்களை அவமதிக்கும் வகையில் காசாவில் அணிவகுப்பு நடத்தி ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

இதையடுத்து கடந்த சனிக்கிழமை பணயக்கைதிகளில் மேலும் 6 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது.

இந்த நடவடிக்கையின் போதும் காசாவில் மேடை அமைக்கப்பட்டு அணிவகுப்பு நடத்தப்பட்டு பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் 2 பணயக் கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழு மகிழுந்தில் அழைத்து வந்துள்ளது.

அந்தப் பணயக்கைதிகள் தங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுப்பது போன்ற காணொளியை ஹமாஸ் ஆயுதக் குழு வெளியிட்டது.

இந்த நடவடிக்கைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறும் வகையில் உள்ளதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

மேலும் விடுதலை செய்யப்பட்ட 6 பணயக்கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேலியச் சிறைகளில் உள்ள பாலஸ்தீனியர்களில் 620 பேரை விடுதலை செய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் இஸ்ரேல் தற்காலிகமாக நிறுத்தியது.

பாலஸ்தீனிய கைதிகள் 620

# பதவியைத்
## ஜனாதிபதி ெ



(கீவ்)

உக்ரைனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவியைக் கொடுத்தால் தனது ஜனாதிபதிப் பதவியைத் துறக்கத் தான் தயாராக இருப்பதாக அந் நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைன்-ரஷ்யா இடையேயான போர் கடந்த 3 ஆண்டுகளாக நீடித்து வரும் நிலையில் இப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

மேலும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சர்வாதிகாரி போல் செயற்படுகிறார் எனவும் இவர் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் கையெழுத் தாக விட மாட்டார் எனவும் ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்நிலையில் குறித்த விட யம் தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்த போதே உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது உக்ரைனில் அமைதி நிலவ வேண்டும் என்றால் தனது பதவியை விட்டுக் கொடுக்கத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ் போர்!

# அபாயம்!

## யை ரத்து செய்த ஹமாஸ்

## இருக்கும்படி உத்தரவிட்ட நெதன்யாகு



பேரையும் இஸ்ரேல் விடுதலை செய்யவில்லை.

பாலஸ்தீனியக் கைதிகளை விடுதலை செய்யாத நிலையில் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது.

பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாத வரை இஸ்ரேலுடன் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தப் பேச்சு வார்த்தையை ஹமாஸ் இரத்து செய்துள்ள நிலையில் பாதுகாப்புப் படையினரை தயார் நிலையில் இருக்கும்படி இஸ்ரேல் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். (நி-8)

# உக்ரைனை ஸ்தம்பிக்க வைத்த ரஷ்யா



(கீவ்)

ஒரே நேரத்தில் உக்ரைன் மீது 267 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்திய ரஷ்யாவிற்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையிலான போர் 3 ஆண்டுகளை நெருங்கியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேச்சு நடத்திப் போரை முடிவுக்கு கொண்டு வரவுள்ளதாக சமீபத்தில் தெரிவித்திருந்தார். ஆனால், இரு நாடுகளிடையே தொடர்ந்து தாக்குதல்கள் நீடித்து வருகின்றன.

இந்த நிலையில் ஒரே சமயத்தில் 267 ட்ரோன் தாக்குதலில் ரஷ்யா ஈடுபட்டதாக உக்ரைன் விமானப் படையின் செய்தித் தொடர்பாளர் யுரி இக்னட் தெரிவித்துள்ளார்.

267 ட்ரோன்களில் 138 ட்ரோன்கள் இடைமறித்து தாக்கி அழிக்கப்பட்டதாகவும், 119 ட்ரோன்கள் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாமல் மாயமாகி விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், எஞ்சிய 10 ட்ரோன்களின் நிலை குறித்து அவர் விளக்கவில்லை. ஆனால், கீவ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் அவை தாக்கியதாக ஆயுதப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த ட்ரோன்களோடு 3 நெடுந்தொலை ஏவுகணைத் தாக்குதலையும் ரஷ்யா நடத்தியுள்ளதாகவும் அதில் உக்ரைனின் 5 பகுதிகளில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியதாவது, ஒரே இரவில் 200இற்கும் மேற்பட்ட ட்ரோன் தாக்குலில் ரஷ்யா ஈடுபட்டது. ரஷ்யாவின் இந்த வான்வழிப் பயங்கரவாதத்திற்குக் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உக்ரைனுக்கு ஆதரவாக கூட்டணி நாடுகள் துணை நிற்க வேண்டும். ஒவ்வொரு நாளும் எங்களின் மக்கள் இதுபோன்ற வான்வழிப் பயங்கரவா தத்தை எதிர்கொள்கின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-8)

## பத் துறக்கத் தயார்

## ஜெலன்ஸ்கி அறிவிப்பு

தயார் எனவும் உக்ரைனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் எனவும் ரஷ்யாவின் முழு மையான படை யெடுப்பிற்கு எதிராக உக்ரைனுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்கள் மிகவும் தேவை. உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே ட்ரம்ப் மத்தியஸ்தராக இருக்க வேண்டும் எனவும் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேட்டோ நாடுகளுக்கு நேட்டோ படைகள் பாதுகாப்பு தரும். குறிப்பாக நேட்டோ உறுப்பு நாட்டை யாராவது தாக்கினால், பதிலாக அனைத்து நேட்டோ நாடுகளும் ஆதரவாக வரும். இது தமக்கான பாதுகாப்பைத் தரும் என உக்ரைன் கருதுகிறது. நேட்டோவில் உக்ரைன் உறுப்பினராக இணைய ரஷ்யா மறுப்பு தெரிவித்ததே போருக்கு முக்கிய காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# உக்ரைனுக்கு விரையும் ஐரோப்பிய தலைவர்கள்

(கீவ்)

உக்ரைனிற்கு எதிரான ரஷ்யாவின் போர் ஆரம்பித்து மூன்று வருடங்கள் நிறைவையொட்டி கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உட்பட ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைனிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சன்செஸ், நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து உட்பட 15 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் உக்ரைன் தலைநகருக்குச் சென்றுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் மீது அழுத்தங்களை பிரயோகித்துவரும் நிலையில் உக்ரைனிற்கான தங்கள் ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் அந்த நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைன் போர் குறித்து ஆராயவுள்ளனர்.

உக்ரைன் என்பது ஐரோப்பா என்பதால் நாங்கள் உக்ரைனில் உள்ளோம். உயிர்வாழ்தலிற்கான இந்த போராட்டத்தில் உக்ரைனின் தலைவிதி மாத்திரம் ஆபத்தில் இல்லை. ஐரோப்பாவின் தலைவிதியும் ஆபத்தில் உள்ளது என ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வொன் டெயர் லெயென் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதுக்கடை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்

# தகவல் கிடைத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேசிய பாதுகாப்பு குறித்து தகவல் கிடைத்தும் அரசாங்கம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்குரிய பெண்ணின் வர்ணப் புகைப்படம் கிடைத்தும் நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை.

இது தொடர்பாக பொறுப்பான வர்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது சஜித் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இது தொடர்பில் ஜனாதிபதியும் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.

அதேவேளை ஜனாதிபதி தலைமையிலான அமைச்சர்களும் இதில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் எனவும் பிரதமர் பதிலளித்தார். (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 200-300 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 260 | 180 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1200 | 1100-1200 | 1300 |
| தக்காளி | 120 | 100 | 150 | 80-120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 250 | 200-300 | 250 |
| கோவா | 300 | 300 | 350 | 320 | 350 |
| கரட் | 850 | 700 | 800 | 760 | 1000 |
| பூசணி | 140 | 140 | 150 | 80-110 | 200 |
| புடோல் | 150 | 240 | 150 | 150-200 | 300 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 250 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 180 | 180 | 140 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 600 | 450-550 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 400 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 400 | 350-400 | 400 |
| லீக்ஸ் | 400 | 400 | 300 | 260 | 400 |
| பீற்றூட் | 250 | 350 | 300 | 100 | 300 |
| கறிமிளகாய் | 750 | 800 | 1000 | 400-600 | 1000 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 2000 | 1500-2500 | 2400 |
| போஞ்சி | 180 | 300 | 300 | 150-250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | 200 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 200-250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 240 | 250 | 150-250 | 230-270 |
| இராசவள்ளி | 550 | 500 | 500 | 400-500 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 200 | 50-80 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 160 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 65 | 100 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 140 | 70 | 100 | 160 |

## இன்று ஒரு தகவல் 329



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வாடிக்கையாளரைக் கவர்வது எப்படி?

எனக்கு அதிஷ்டமே இல்லை சேர் என்றார் ஒருவர். ஏன் அப்படி சொல்கிறீர்கள் என்று கேட்டேன். வியாபாரம் செய்யலாம் என்று ஒரு கடை வைத்தேன் சேர். வேண்டப்பட்டவன் கூட என் கடையிலே வந்து எதுவும் வாங்கமாட்டேன் என்கின்றான். எல்லோரும் அடுத்த கடைக்குத்தான் போகிறார்கள் என்று சொல்லி மிகவும் அலுத்துக்கொண்டார்.

இதற்கு போய் அதிஷ்டம் இல்லை என்று சொல்கிறீர்களே. வாடிக்கையாளரைக் கவர்வது எப்படி என்று உங்களுக்குத் தெரியவில்லை அதுதான் குறை என்றேன். சேர் உங்களுக்குத் தெரிந்தால் அந்த இரகசியத்தை எனக்கு கொஞ்சம் சொல்லிக் கொடுங்களேன் என்றேன். சரி உங்கள் காதை இப்படிக் கொஞ்சம் கொடுங்கள் என்று சொல்லி ஆரம்பித்தேன். கடை வைத்திருப்பவர்கள் எல்லோரும் இதைக் கொஞ்சம் காதிலே வாங்கிக் கொள்ளுங்கள். எப்பவும் பணத்தை சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கக் கூடாது. அதைவிட முக்கியமாக நீங்கள் சம்பாதிக்க வேண்டியது வாடிக்கையாளர்களின் மனநிறைவு! வருபவர்கள் திருப்தியோடு போக வேண்டும். அது முக்கியம். அதிலே கவனமாக இருக்க வேண்டும். கடைக்கு வரும் ஒருவர் ஏதாவது ஒரு குறை சொல்கிறார் என்றால் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. மிகவும் அக்கறையோடு அதைக் காது கொடுத்து கேட்க வேண்டும்.

அப்படியா சேர் அதை நான் அவசியம் கவனிக்கிறேன் என்று சொல்லவேண்டும். ஒருவர் வருகிறார். சேர் நேற்று உங்கள் கடையிலே இதை நான் வாங்கிக் கொண்டு போனேன். வீட்டில் இதை வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதைத் திருப்பிக் கொடுப்பதற்காக வந்திருக்கிறேன் என்று சொல்லி திருப்பிக் கொடுக்கிறார். உடனே நீங்கள் முகம் சுழிக்கக் கூடாது. எரிச்சல் படக்கூடாது. வழக்கம் போல நிதானமாக முகமலர்ச்சியோடு அதைத் திருப்பி வாங்குங்கள்! இவ்வளவு பணத்திற்குப் பொருட்கள் வாங்கினால் இந்தக் கரண்டி அன்பளிப்பு! இப்படி ஏதாவது கொடுக்கலாம். பண்டிகைக் காலங்களிலேயும் பொருட்கள் வாங்குபவர்களுக்கு இப்படி ஏதாவது பொருத்தமாக ஒரு அன்பளிப்பு கொடுக்கலாம். நீங்கள் கொடுப்பது ஒரு சர்வ சாதாரணமான பொருளாக இருந்தாலும் அது வாங்குபவர் மனதிலே ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். எதுவும் உங்களால் கொடுக்க முடியவில்லை என்றால் உங்கள் முகம் நிறைந்த சிரிப்பையாவது கொடுங்கள் அது போதும். உங்கள் கடையிலே இல்லாத ஒரு பொருளை வாடிக்கையாளர் வந்து கேட்கிறார். உடனே இல்லை! என்று முகத்திலே அடித்தது போல சொல்லிவிடாதீர்கள்.

கொஞ்சம் உட்காருங்கள் சேர் என்று சொல்லி உங்கள் பணியாளர் யாரையாவது அனுப்பி வெளியிலேயிருந்து வாங்கி வரச்சொல்லி அவரிடம் கொடுங்கள். சிலபேர் உங்கள் கடைக்கு வரும் பொழுது அவர் வீட்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வருகிறார்கள் என்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும். அந்தக் குழந்தைகளை முதலிலே கவனிக்க வேண்டும். அதன் கன்னத்தைக் கிள்ள வேண்டும். அதனிடம் விளையாட வேண்டும். அதற்கு ஏதாவது மிட்டாய், பிஸ்கட் கொடுத்து அதன் கவனத்தைக் கவர வேண்டும். அதன் பிறகு தான் பெரியவர்களைக் கவனிக்க வேண்டும்.

உங்கள் கடையிலே வேலை செய்யும் பணியாளர்கள் சுத்தமாக இருக்க வேண்டும். சிரித்த முகம், சுறுசுறுப்பு இது இரண்டும் அவர்களுக்குத் தேவை அழுது வடிந்து கொண்டு இருக்கக்கூடாது. இன்னுமொரு விடயம். அதிகமாக பொருள் வாங்கும் ஒருவரிடம் அதிக மரியாதையும் குறைவான பொருள் வாங்குபவர்களிடம் வேறு விதமாகவும் நடந்துகொள்ளக்கூடாது.

5 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி 500 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி அவர்களிடம் நீங்கள் காட்டுகின்ற மரியாதையிலே வித்தியாசம் இருக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் கடையிலே ஒரு பொருள் வாங்கினால் அது உண்மையானதாகவும் தரமானதாகவும் இருக்கும் என்ற எண்ணம் மக்களுக்கு வர வேண்டும். அதனாலே தரமான பொருட்களையே நீங்கள் உங்கள் கடையில் வைத்திருங்கள்.

இதுவரைக்கும் நான் சொல்லியவற்றை கவனத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் கடையை ஆரம்பித்தால் வியாபாரம் பிய்த்துக்கொண்டு போகவில்லை என்றால் அதன் பிறகு என்னிடம் கேளுங்கள். இந்த யோசனைகளில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய ஒரு விடயம் உண்டு. அது என்ன என்று தெரிந்து இதைக் கேளுங்கள். என்னுடைய நண்பர் ஒருவர் வந்தார். சேர் உங்கள் யோசனையைக் கேட்டதனாலே நான் ஒரு அறை வாங்கியதுதான் மிச்சம் என்றார்.

என்ன ஆச்சு? என்று கேட்டேன். எங்கள் கடைக்கு ஒரு அம்மா குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தார். உங்கள் யோசனைப்படி அந்தக் குழந்தையின் கன்னத்தைக் கிள்ள வேண்டும் என்று முயற்சி செய்தேன். திடீரென்று அந்தக் குழந்தை தலையைக் குனிந்துவிட்டது. என் கை குழந்தையின் கன்னத்திற்குப் பதிலாக அதைத் தூக்கி வந்த அம்மா கன்னத்தைக் கிள்ளி விட்டது. அது தான் இப்படி ஆகிவிட்டது என்றார் கன்னத்தைத் தடவிக்கொண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டும் மீனவர்களை தடுக்க தமிழக அரசு தவறியுள்ளது

## மன்னார் மாவட்ட மீனவ அமைப்புக்கள்

(மன்னார்)

தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களைக் கட்டுப்படுத்த தவறியுள்ளது என மன்னார் மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

எமது கடல் எல்லையைத் தாண்டி வராதீர்கள் எனத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறோம் எனினும் அத்து மீறி நுழைகின்ற நிலையிலே தொடர்ச்சியாகத் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் 32 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு மீனவர்கள் விடயத்தில் அக்கறை செலுத்தி பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதை விடுத்து எல்லை தாண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

எதிர் காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படும் சம்பவங்கள் இல்லாமல் போக வேண்டும் என்றால் இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையைத் தாண்டாமல் இருப்பதே ஒரே தீர்வு என மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (6-8-285)

# கைதான 32 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்

(மன்னார்)

மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் கைதான 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டார்.

மன்னார் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் வட மத்திய மாகாண கடற்படையினரின் கூட்டு நடவடிக்கையின் போதே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான 32 இந்திய மீனவர்களும் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ் தலத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 32 மீனவர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன் தினம் இரவு உத்தரவிட்டார். (6-8-285)

# 50 ஆயிரத்து 600 மில்லிலீற்றர் கோடாவுடன் இளைஞன் கைது




(நெளுக்குளம்)

முத்தையங்கட்டு இடது கரை பேராற்று பகுதியில் கசிப்பு உற்பத்திக்குத் தயாராக இருந்த 50 ஆயிரத்து 600 மில்லிலீற்றர் கோடாவுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக ஒட்டு சுட்டான் பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரி.சுபேசனுக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவர் தலைமையிலான குழு நேற்று முன்தினம் மாலை குறித்த இடத்திற்கு சென்று முன்னெடுத்த சுற்றி வளைப்பின் போது உற்பத்திக்குத் தயாராக இருந்த நிலையில் 50 ஆயிரத்து 600 மில்லிலீற்றர் கோடா மீட்கப்பட்டதுடன் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கான கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞன் 24வயதுடைய முத்தையங்கட்டு இடதுகரையைச் சேர்ந்தவர் என்பதும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட அந் நபருக்கு பிணை வழங்கப்பட்டு விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருப்பதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8-299)

# வவுனியாவில் கோர விபத்து தீப்பற்றி எரிந்த வாகனங்கள்



(வவுனியா)

வீதியில் சென்று கொண்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகிய நிலையில் குறித்த இரு வாகனங்களும் தீப்பற்றி முழுமையாக எரிந்த சம்பவம் ஒன்று வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. வவுனியா நகரப் பகுதியில் இருந்து பூந்தோட்டம் நோக்கிச் சென்ற காரும் பூந்தோட்டம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய நிலையில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதனை அடுத்து இரு வாகனங்களும் தீப்பற்றி எரிந்த நிலையில் அங்கு ஒன்று கூடிய மக்களினால் தீயைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை.

இதனையடுத்து வவுனியா நகர சபையின் தீயணைப்பு பிரிவினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்து கருகியுள்ளது.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு காரில் வந்தவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# காணி உரிமத்திற்கான போராட்டம் வீண்போகவில்லை

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வசிக்கும் 83 குடும்பங்களுக்கான காணி உரித்துக்கான பத்திரங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் 25 வருடங்களாக அவற்றை பெறுவதற்கு காணி உரிமையாளர்கள் பல்வேறு தரப்பினர்களுடன் முயற்சிகளை மேற்கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த காணி உரிமையாளர்களுக்கான பத்திரங்களை வழங்குவதற்கான பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெற்று இருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக 25 வருடமாக தமது காணிக்கான உரிமையை பெறுவதற்காக போராடியதன் பலனை அடைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணிக்கான உரிமையை பெறுவதற்கு எந்த அரசியல்வாதிகளும் தமக்கு துணையாக இருக்கவில்லை எனவும் கவலை வெளியிட்டனர். (6-8-250)

# காணாமலாக்கப்பட்ட மகனை காணாது மரணித்த தாய்

(குருமன்காடு)

வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சுழற்சி முறை போராட்டமானது 3000 ஆவது நாளான நேற்று தனது மகனை தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வசித்து வந்த வேலுச்சாமி மாரி (மாரி அம்மா) என்பவரே தனது 79 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

இவரின் மகனான வேலுச்சாமி சிவகுமார் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்திலே காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னின்று போராடியிருந்தார். வவுனியா ஏ9 வீதியில் சுழற்சி முறையில் இடம்பெற்று வரும் போராட்டத்திலும் இவர் தொடர்ச்சியாக பங்கு பற்றியிருந்தார்.

தனது மரணித்திற்கு முன்பதாக தனது மகனை நேரில் பார்த்து விடுவேன் என ஏங்கிய ஒரு தாயின் ஏக்கம் நிறைவேறாமல் முற்றுப் பெற்றுள்ளது. (6-8-250)

# 400 கிலோ கேரளக் கஞ்சாவுடன் கிளிநொச்சியில் இருவர் கைது



(கிளிநொச்சி)

கூலர் ரக வாகனத்தில் சூட்சுமமாக கடத்தி வந்த சுமார் 400 கிலோக்கிராமிற்கு மேற்பட்ட நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் இருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனமொன்றில் கேரளக் கஞ்சா கடத்தப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய கிளிநொச்சி பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பகுதியில் இருந்து கிளிநொச்சி பயணித்த கூலர் ரக வாகனத்தை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது சுமார் 400 கிலோக்கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவும் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-8-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 710





வந்தியத்தேவனும் தானும் அலைமோதிய கடலில் அலைப்புண்டு கை சளைத்துப் போனது வரையில் ஞாபகம் வந்தது. அப்புறம் ஒரே குழப்பமாக இருந்தது.

அச்சமயம் புத்த பிக்கு ஒருவர் அந்த அறைக்குள் வந்தார். வழக்கம்போல் கையில் அமிர்த கிண்ணத்துடன் வந்தார்! இளவரசன் அருகில் வந்ததும் பிக்கு அவனை உற்றுப் பார்த்தார்! இளவரசன் கையை நீட்டிக் கிண்ணத்தை வாங்கி அதில் இருப்பது என்னவென்று பார்த்தான். அது தேவலோகத்து அமுதம் இல்லையென்று உறுதிப்படுத்திக் கொண்டான்.

மருந்து அல்லது மருந்து கலந்த பால் என்று தெரிந்து கொண் டான். பிக்குவை நோக்கி, "சுவாமி! இது என்ன இடம்? தாங்கள் யார்? எத்தனை நாளாக நான் இங்கே இப்படிப் படுத்திருக்கிறேன்?" என்று கேட்டான்.

பிக்கு அதற்கு ஒன்றும் மறுமொழி சொல்லாமல் திரும்பிச் சென்றார். அடுத்த அறைக்கு அவர் சென்று, "ஆச்சாரியாரே! சுரம் நன்றாய்த் தெளிந்துவிட்டது. நினைவு பூரணமாக வந்துவிட்டது!" என்று கூறியது இளவரசன் காதில் விழுந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் வயது முதிர்ந்த பிக்கு ஒருவர் பொன்னியின் செல்வன் இருந்த அறைக்குள் வந்தார். கட்டிலின் அருகில் வந்து அவரும் இளவரசனை உற்றுப் பார்த்தார். பிறகு மலர்ந்த முகத்துடன், "பொன்னியின் செல்வர்! தாங்கள் இருக்குமிடம் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரம்.

கடுமையான தாபஜ் ஜரத்துடன் தாங்கள் இங்கே வந்து மூன்று தினங்கள் ஆயின. தங்களுக்கு இந்தச் சேவை செய்வதற்குக் கொடுத்து வைத்திருந்தோம். நாங்கள் பாக்கியசாலிகள்!" என்றார்.

"நானும் பாக்கியசாலிதான், இந்தச் சூடாமணி விஹாரத்துக்கு வந்து பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். எப்போதோ ஒருசமயம் இந்த நகரின் துறைமுகத்துக்குப் போகும் போது வெளியிலிருந்து பார்த்திருக்கிறேன். தெய்வாதீனமாக இங்கேயே நான் வந்து தங்கியிருக்கும்படி நேர்ந்தது. சுவாமி எப்படி நான் இங்கு வந்து சேர்ந்தேன்? சொல்ல முடியுமா?" என்று அருள்மொழிவர்மன் கேட்டான்.

"இளவரசே! முதலில் தங்களுடைய கையில் உள்ள மருந்தைச் சாப்பிடுங்கள் எனக்குத் தெரிந்த விபரங்களைச் சொல்லுகிறேன்" என்றார் பிக்கு.

இளவரசன் மருந்தைச் சாப்பிட்டு விட்டு, "ஐயா! இது மருந்து அல்ல தேவாமிர்தம். என் விடயத்தில் தாங்கள் எவ்வளவோ சிரத்தை எடுத்துச் சிகிச்சை செய்வித்திருக்கிறீர்கள். ஆனால் இதற்காகத் தங்களுக்கு நான் நன்றி செலுத்தப் போவதில்லை" என்றான்.

ஆச்சாரிய பிக்கு புன்னகை புரிந்து, "இளவரசே தாங்கள் நன்றி செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை. நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வது பரமோத்தம தர்மம் என்று புத்த பகவான் அருளியிருக்கிறார். நோய்ப்பட்ட பிராணிகளுக்குக் கூடச் சிகிச்சை செய்யும்படி புத்த தர்மம் கட்டளையிடுகிறது. தங்களுக்குச் சிகிச்சை செய்ததில் அதிக விசேடம் ஒன்றுமில்லை. சோழகுலத்துக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள்.

தங்கள் தந்தையார் சுந்தர சோழ சக்கரவர்த்தியும், தங்கள் திருத்தமக்கையார் இளைய பிராட்டியும் புத்த தர்மத் துக்கு எவ்வளவோ ஆதரவு அளித்திருக்கிறார்கள். இலங்கை அநுராதபுரத்தில் புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கட்ட நீங்கள் ஏற்பாடு செய்ததும் எங்க ளுக்குத் தெரிந்ததே. அப்ப டியிருக்கும் போது, நாங்கள் செய்த இந்தச் சிறிய உதவிக் காகத் தங்களிடம் நன்றி எதிர்பார்க்கவில்லை."

"ஆச்சாரியரே! நன்றி செலுத்துவது பற்றி அந்த முறையில் நான் கூறவில்லை. எனக்கு எப்பேர்ப்பட்ட கடும் சுரம் வந்திருக்க வேண்டும், என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மாடும் புலியும்



அதற்குப் புலி கொஞ்ச நேரம் விட்டு அந்த காட்டில் இருக்கின்ற விலங்குகள் எல்லாம் எவ்வளவு உண்மையாக இருக்கிறது என்று தெரிந்து கொள்ள நினைத்தது. அதனால் மாடு தன் குட்டிக்கு பால் கொடுக்க அனுமதித்தது புலி.

உடனே பசு மாடு தன்னுடைய கிராமத்திற்குச் சென்று தன் குட்டிக்கு பால் கொடுத்துவிட்டு அதனிடம் சொன்னது "என்னுடைய செல்லக் குட்டியே! நீ நல்லா இருந்து எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும், யாரிடமும் பொய் சொல்ல கூடாது. நீ எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க வேண்டும்" என்றது.

பின்னர் தன் வார்த்தையைக் காப்பாற்றக் காட்டுக்குத் திரும்பச் சென்று புலியின் முன்னால் நின்றது. மாட்டைப் பார்த்ததில் புலிக்கு ஒரே ஆச்சரியம். அந்நேரம் புலி யோசித்தது இந்த மாடு தன் வாழ்க்கையை விட தான் சொன்ன வார்த்தைகளுக்கு அதிகம் மதிப்பு கொடுக்கிறது.

இந்த மாட்டுக்குத் தீங்கு செய்வது மிகவும் தவறு என்று யோசித்தது. "நீ உன்னுடைய நேர்மையை நிரூபித்து விட்டாய்.

நீ சந்தோஷமாகச் சென்று உன் குழந்தையுடன் வாழ். இனிமேல் என்னால் உனக்கு எந்தத் தீங்கும் வராது" என்று சொல்லி அங்கிருந்து சென்று விட்டது. உடனே அந்த மாடும் தன்னுடைய கிராமத்திற்குச் சென்று தன் குட்டியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

இந்தக் கதையினுடைய நீதி என்னவென்றால் நீங்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்தால் வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவும், நல்ல நிலைமைக்கும் செல்ல முடியும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும்.
> – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கோணேச்சரத்தை புனரமைத்துத் தாருங்கள்

நாளை சிவராத்திரி விரதம். இஃது சிவ விரதங்களில் மிகவும் முதன்மைக்குரிய விரதம்.

வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாக இருக்கக்கூடிய நமச்சிவாயப் பெருமானைப் பசித்தும் விழித்தும் நோற்கும் விரதம் என்பதால், இவ்விரதம் மகிமை நிறைந்தது.

எனினும் எங்கள் சிவாலயங்கள் தொடர்பில் இருக்கக்கூடிய நெருக்கடிகள் சைவ மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளன.

ஆம், வவுனியா வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தில் மாலை 6 மணியுடன் பூசை வழிபாடுகளை முடிவுறுத்த வேண் டிய துர்ப்பாக்கிய நிலைமையுள்ளது.

காலாகாலமாக நடைபெற்று வந்த சிவ வழிபாட்டில், தொல்லியல் திணைக்களம் இடைப்புகுந்து நிபந்தனைகளை விதித்ததன் காரணமாக இத்தகு நிலை ஏற்பட்டுள்ளது.

தவிர, பாடல் பெற்ற சிவத் தலமாக விளங்கும் திருகோணமலை திருக்கோணேச்சரர் ஆலயம் புனரமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

ஆம், ஆலயத்தின் வரலாற்று ஆதாரங்களில்; இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அமைத்தான் என்பதை அறிய முடியும்.

எனினும் திருக்கோணேச்சரம் எனும் அழகிய சிவாலயம் அன்னியராட்சிக் காலத்தில் அழிக்கப்பட்டது. இருந்தும் இன்று அப்பெரும் தலம் உரியவாறு புனரமைக்கப்படாமை சைவ மக்களை மிகுந்த வேதனைக்கு ஆளாக்கியுள்ளது.

மன்னார் மாதோட்டத்தில் அமைந்த பாடல் பெற்ற சிவத்தலமாகிய திருக்கேதீச்சரத்தைப் புனரமைத்தது போன்று திருக்கோணேச்சரத்தையும் இந்திய மத்திய அரசு புனரமைத்துத் தரவேண்டும் என சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இந்தியத் தூதுவராலயத்தினூடாக இந்திய அரசிடம் கோரிக்கை விட்டிருந்தார்.

இதற்கும் மேலாக, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தவேளை, திருகோணமலைக்குச் சென்று திருக்கோணேச்சரப் பெருமானை வழிபட்டார்.

அதன்போதும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்; திருக்கோணேச்சரர் ஆலயத்தை இந்திய அரசு புனரமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மனுவை அவரிடம் நேரில் கையளித்திருந்தார்.

தமிழர் தாயகத்தின் தலைநகராக விளங்கக்கூடிய திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேச்சரர் ஆலயம் எங்கள் வரலாற்றுச் சொத்து.

ஆலயத்தின் அமைவிடம் சிவபூமியாகிய இலங்கையில் சிவவழிபாடு எத்துணை தொன்மை வாய்ந்ததாக இருந்துள்ளதென்பதை ஆதாரப்படுத்தும்.

எனவே எங்கள் தமிழினத்தின் வரலாற்றுச் சொத்தாக இருக்கக்கூடிய திருகோணமலை திருக்கோணேச்சரர் சிவன் ஆலயத்தை இந்திய அரசு புனரமைத்துத் தருவதுடன், லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்ட கண்டாமணி, மணிக்கோபுரம் ஏறுவதற்கும் அதன் ஓசை ஒலி எங்கும் வியாபிப்பதற்கும் இந்திய அரசு உதவ வேண்டும்.

தமிழ் மக்களின் இக்கோரிக்கையை சிவராத்திரி விரத காலத்தில் இந்திய அரசிடம் வினயமாக முன்வைக்கின்றோம்.

## புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்வரை
# 13ஆவது திருத்தம் மாற்றமில்லாமல் அமுல்படுத்தப்படும் - அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வரை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மாற்றமில்லாமல் அமுல்படுத்தப்படும் என ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தான் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இந்த வரவு செலவுத் திட்டம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடையது, சர்வதேச நாணய நிதியத்தினுடையது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அத்துடன் வரவு செலவுத் திட்டத்துக்கு பல பெயர்களையும் சூட்டுகிறார்கள். மக்களுக்கு பயனுடையதாக அமைந்தால் வேண்டிய பெயரை எதிர்க்கட்சிகள் பாதீட்டுக்கு சூட்டிக் கொள்ளட்டும்.

நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் அனைத்து மக்களும் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிவாரண வழங்கலுக்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எந்த தரப்பினரும் புறக்கணிக்கப்படவில்லை.

வரவு செலவுத் திட்டத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பில் குறிப்பிடப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. புதிய யாப்புருவாக்கம் குறித்து ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம்.

புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அதிகரிக்காமலும், குறைக்காமலும் எவ்வித மாற்றமில்லாத வகையில் செயற்படுத்தப்படும். சிறந்த வாய்ப்பு கிடைக்கப் பெறும் முதல் சந்தர்ப்பத்தில் பொது மக்களின் அபிப்பிராயங்களுக்கும் பாராளுமன்ற ஆலோசனைக்கும் போதுமான கால வகாசம் வழங்கப்பட்டு புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம், அதற்கு தயாராகவே உள்ளோம் என்றார். (ம-7)

# பெப்ரவரி மாதத்தின் முதல் 20 நாட்களில்
## 1,75,436 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதத்தின் முதல் 20 நாட்களில் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 436 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 428,197 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 68,668 ஆகும்.

மேலும், ரஷ்யாவிலிருந்து 56,376 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 40,515 சுற்றுலாப் பயணிகளும் ஜேர்மனியிலிருந்து 27,443 சுற்றுலாப் பயணிகளும் சீனாவிலிருந்து 25,427 சுற்றுலாப் பயணிகளும் பிரான்ஸிலிருந்து 23, 806 சுற்றுலாப் பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து 15,828 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## அநுராதபுரத்தில் கிணற்றில் வீழ்ந்தவர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம், கல்நேவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹெலபதுகம பிரதேசத்தில் அமைந்துள்ள வயல் வெளியில் உள்ள கிணற்றில் விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளதாகக் கல்நேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கல்நேவ, ஹெலபதுகம பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இவர் மூன்று நாட்களுக்கு முன்னர் கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் அநுராதபுரம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்நேவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-7)

## இரத்தினபுரியில்
# பஸ் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி, எஹெலியகொட நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எஹெலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இரத்தினபுரி, எஹெலிய கொட பகுதியைச் சேர்ந்த 68 வயதுடையவராவார்.

இதனையடுத்து பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எஹெலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிங்டனில் இலங்கையின் உயர்ஸ்தானிகராலயம்

(வெலிங்டன்)

இலங்கை அரசாங்கம் நியூசிலாந்து தலைநகர் வெலிங்டனில் புதிய உயர் ஸ்தானிகராலயத்தை நிறுவியுள்ளது.

தூதரக சேவைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும்.

வெலிங்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அறிவிப்பின் படி, புதிய அலுவலகம் லெவல் 8, இலக்கம் 38, பெதெரிக் டவர், வாரிங் டெய்லர் வீதி, வெலிங்டன் சென்ட்ரல் என்ற இடத்தில் அமைந்துள்ளது.

தூதரக கருமபீடம், வாராந்தம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை, பொது விடுமுறை நாட்களைத் தவிர்த்து, பொது மக்களுக்காக திறந்திருக்கும்.

சேவைகளில் கடவுச்சீட்டு செயலாக்கம், பிறப்புப் பதிவுகள், இரட்டை குடியுரிமை விண்ணப்பங்கள், ஓய்வூதியம் தொடர்பான விடயங்கள், வழக்கறிஞரின் அதிகாரங்கள் மற்றும் உறுதிமொழிகள் ஆகியவை அடங்கும்.

மேலதிக விபரங்களுக்கு, வெலிங்டனில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தை slhc.wellington@ mfa.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# சிவனுக்குரிய விரதங்களில் தலையாயது சிவராத்திரி 26.02.2025



உயிர்களுக்கு நன்மை தரும் சிவனது இரவு சிவராத்திரி. திருமாலும், பிரமனும் தாமே முழுப் பொருள் என செருக்குற்றுப் போர் செய்தபோது அவர்களது அறியாமையைப் போக்க சிவன் நெருப்பு மலையாகத் தோன்றிய இரவு சிவராத்திரி.

மன்னுயிர்கள் உய்யும் பொருட்டு உமாதேவியார் நான்கு சாமமும் சிவபூசை செய்த இரவும் "நன்றே யருளும் சிவனிரா".உமை அம்மை இந்நாளில் விரதமிருந்து நான்கு யாமமும் பூசைவழிபாடு "பசித்து, தனித்து விழித்து" வீடுபேறாகிய பதவி வேண்டுமென சிவன் வரம் கொடுத்த தினம் சிவராத்திரி ஆகும்.

உலக மக்களும் ஈழத்து மக்களும் மனம், மெய், மொழிகளால் சிவனை வழிபடுவோம். ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் காண்போம். வீடுபேறு பெறுவோம்.

**நன்றே யருளுஞ் சிவனிராவின்**
**நான்கு சாமப் போதெல்லாங்**
**குன்றாப் பிறவிக் குலமழித்து**
**வீடு கூட்டும் பெருமாற்கு**
**மன்றற் கலசம் வளர் நீராற்**
**பிறவான் முழுக்கும் வழிபாடுந்**
**துன்றுந் தொண்டர் விழித்த பயன்**
**றுய்க்கும் வண்ணஞ் செய்வரால்**

ஈழத்துச் சிதம்பர புராணம்

உயிர்களுக்கு நன்மையைத் தரும் சிவன் இரவென்று சொல்லப்படும் சிவராத்திரியில் நான்கு சாமப்பொழுது முழுவதும் குறையாது பெரும் பிறவிக் கூட்டத்தை அழித்து உயிர்களுக்கு வீடுபேறு அருளும் எம்பெருமான் சிவனுக்கு அண்மையில் உள்ள சிவத்திரு சிவ ஆலயங்களுக்குச் சென்று பசித்திருந்து தனித்திருந்து திருமுறையும் நாம வழிபாடும் செய்து விழித்திருந்து, விசேட அபிடேகத்தையும் ஆராதனைகளிலும் அருள் பயனை நுகருமாறு வழிபாடு செய்வோம்.

சிவ-பதவி-முத்தி- பெறுவோம் சிவராத்திரியை அடுத்து வரும் அமாவாசை நாளில் எம்பெருமான் திருவீதியில் வலமாக எழுந்தருளி வந்து நெடிய அலைகள் முத்துக்களை எறிந்து விளையாடும் சுவாமி கடலிற் தீர்த்தமாடுவது **உயிர்கள் பேரின்பக் கடனிற் புகுவதற்கே.**

காரைநகர்-ஈழத்துச் சிதம்பரத்தில் முனிவர் சமாதியடைந்த **துர்வாசகத்தில் தீர்த்தம் ஆடுவான்**.ஆலயம் புனருத்தானம் நிறைவாக சுந்தரேஸ்வரப்பெருமானைப் பிரார்த்திப்போம். மாதா மாதம் மகத்தில் மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவசாசகம் முற்றோதல் செய்வோம்.

கீரிமலை நகுலாம்பிகை நகுலேஸ்வரன் கடலில் கண்டகித் தீர்த்தம் ஆடுவோம் **சகல நலமும்** பெறுவோம்.

கௌரி அம்பிகை சமேத திருக்கேதீஸ்வரன் ஆலய பாலாவி நீரில் **தீர்த்தம் ஆடுவோம்**.சகல தோசங்கள் நீங்கி நலம் பெறுவோம். மாதுமை சமேத திருக்கோணேஸ்வரன் ஆலய பாபநாசத்தில் நீராடுவோம். நம் பாவம் நீங்கி நலம் பெறுவோம்.

**ஓங்கார சிவம் அருள் தரும் திருமுறைகளை தினம்-ஓதுவோம்**, ஆங்கார ஆணவம் தரும் சினிமாப் பாடல்களையும் தவிர்ப்போம் **அன்பான திருவார்த்தைகளில் சிவம் வரும்.**


ஆங்காரம் ஆணவம் தரும் ஒரு விரலால் திருநீறு அணிவதைத் தவிர்ப்போம்

**மூன்று விரலால் சிவ சிவ எனத் திருநீறு பூசி சிவகதிபெறுவோம்.**

மகா சிவராத்திரி அன்று ஏன் தூங்காமல், கண்விழித்து சிவ தியானத்தில் இருப்பது என்பதனை அறிவோம். சிவராத்திரி அன்று ஒரு ஈர்ப்பு பூமியில் இருந்து மேல்நோக்கி கதிர்வீச்சு 26.02.25 புதன் இரவு முதுகுத் தண்டை நேராக்கி அமர்ந்து சிவ சிவ என தியானத்தில் இருக்கும் போது நமது சக்தி சிவனை நோக்கி அருள் தொடர்புடன் வழிபட அவன் அருளாலே எம்பெருமான் திருவடிகளை நாம் வணங்கும் ஓர் அரிய வாய்ப்பு சிவராத்திரி

(நாளை 26.02.25 சிறிய சிவராத்திரி விளக்கம் வாசியுங்கள்), இரவும் பகலும் சிவ சிந்தையுடன் திருமுறை ஓதுவோம்-

ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் காண்போம்.




**க.கு.க சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**




**லக்சி**





**டியூரா**




**கீதா**




**மேனகா**




**யுஸ்ரீனா**




**றொபின்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

புதுகுடியிருப்புப் பகுதியில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனமும் பரந்தன் பகுதியில் இருந்து விசுவமடு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே படுகாயமடைந்தனர். (ம-7,316)

## அநுர அரசாங்...

முன்பாக நேற்று இணை சுகாதார பட்டதாரிகளால் குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக நுண்ணறிவு அளவுகோல் பரீட்சையை நடத்தும் அரசின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மேலும் சுகாதார சேவைக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு, இணை சுகாதாரப் பட்டதாரிகளுக்கு உடனடியாக சேவைப்பயிற்சி வழங்கு, இலவசக் கல்வியை விலைபேசும் கொத்தலாவல பல்கலைக்கழகங்களின் இணை சுகாதாரப் பட்டத்தை அரச சேவை அங்கீகரிக்கும் அராஜகத்தை நிறுத்து, நியாயமற்ற தேர்வுப் பரீட்சை முறையை நிறுத்து ஆகிய வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)

## 3 ஆயிரம்...

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறை போராட்டமானது 3 ஆயிரமாவது நாளை அடைந்துள்ள நிலையில் நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியா தபால் திணைக்களத்திற்கு அருகில் குறித்த ஆர்ப்பாட்டமானது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் உருவப் படத்தினை தாங்கியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளினை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,250)

## நாட்டுக்கு...

தேசிய பாதுகாப்புக்கு அச்சறுத்தல் இல்லை என ஜனாதிபதி அநுர தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என ஜனாதிபதி தெரிவித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நீதிமன்றத்தில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற இருப்பதாகப் புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்தபோதும் அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருப்பது சம்பந்தமாகப் பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டில் கடந்த 18ஆம் திகதியில் இருந்து 21ஆம் திகதிவரையான 4 நாட்களில் 8 மனித படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. உண்மையில் இது தேசிய பாதுகாப்புக்கு பாரிய பிரச்சினையாகும். ஆனால் இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். பாதாள குழுக்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல் உண்மையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என்றார். (ம-7)

## பதில் பொலிஸ்மா...

ரவி செனவிரத்ன நடவடிக்கை எடுப்பாரா? எனப் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கேள்வியெழுப்பினார்.

பிவிதுரு ஹெல உறுமய அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கணேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதற்கு முதல் வாரம் கம்பஹா நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப் படவிருந்த போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவிருந்ததாகத் [illegible] கிடைத்ததா[illegible] அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக அன்றைய தினம் மெய்நிகர் ஊடாக அவரை வழக்கு விசாரணைகளில் முன்னிலைப்படுத்தியதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். கம்பஹா நீதிமன்றத்தில் சஞ்சீவ மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவிருந்தமைக்கான காரணம் அந்த நீதிமன்றத்தின் மீதுள்ள கோபத்தால் அல்ல, சஞ்சீவ மீதிருந்த கோபத்தினாலாகும்.

கம்பஹா நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தை பொலிஸார் தடுத்துள்ளனர் என்பதால், அதனைக் கொழும்பு நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம் என்பதை ஊகிப்பதற்கு பெரும் புலமை தேவையில்லை. ஆனால் தகவல் கிடைத்திருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத பதில் பொலிஸ் மா அதிபர், கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்படுவதற்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றார் எனச் சந்தேகம் வெளியிட்டார். (ம-7)

## குர...

அகிலன்தனுசியா (வயது-35) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவர்.

குறித்த பெண் கணவன், பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது குரங்கு ஒன்று வீதிக்கு நடுவே குறுக்கால் பாய்ந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த தாயும் மகளும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படிருந்தனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி தாய் நேற்றிரவு உயிரிழந்தார். (ம-7,299)

## ஆட்சி...

பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

[illegible] இல்லை. வீடுகளைக் கொளுத்தி, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொன்று அரகலய மூலம் ஆட்சியைப் பிடிக்க மாட்டோம். ஜனநாயக வழியில் எமது பயணம் தொடரும்.

ஆளுங்கட்சியிலுள்ள 159 பாராளுமன்ற உறுப்பினர்களால் பலனில்லை என ஜனாதிபதி கருதினால் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்குச் செல்ல முடியும்.

எம்மிடம் வேலைத்திட்டம் உள்ளது. தூரநோக்கு சிந்தனை உள்ளது. கடந்த காலங்களில் செயற்பட்ட அனுபவம் உள்ளது என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.02.24
சீட்டிழுப்பு இலக்கம் 5757
P 9 2 9 5 8 6
அத சம்பத
P 9 5 8 6
சீட்டிழுப்பு இலக்கம் 0332
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1787
J 53 68 73 82 J
Double Chance 29528

மெகா பவர்
திகதி 24/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2105
J 09 12 29 50 68

ஜய ஜய
திகதி 2025.02.24
சீட்டிழுப்பு இலக்கம் 025
S 1 0 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3999
சீட்டிழுப்பு திகதி 24.02.2025
F 09 48 49 59
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.24
சீட்டிழுப்பு 1066
மீனம் 02 28 52 55 மீனம்
45791 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.02.2025 வெற்றி வாரம் 465
ஆங்கில எழுத்து 0
8 2 9 4 8 0
69729
ரூ.31,797,122.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2731
சீட்டிழுப்பு திகதி 2025.02.24 தினம் திங்கட்கிழமை
21 28 55 62 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,308,932.00
DLB

சனிதா
திகதி 24.02.2025 வெற்றி வாரம் 4892
10 43 77 78 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,639,598.00
52518
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.02.24 வெற்றி வாரம் 2106
06 25 36 49 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,025,527.20
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4443
சீட்டிழுப்பு திகதி 24.02.2025 தினம் திங்கட்கிழமை
09 14 16 17 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.14,276,964.80
210674
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 35 07 50 51 54
சீட்டிழுப்பு வாரம் 1907
24.02.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,443,437.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2557
சீட்டிழுப்பு திகதி : 2025.02.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,491,460.80
04 17 56 73 L
336858
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

## திரு.இராமசாமி இராஜன்

PGD in Child protection University of Rajarata,
Diploma in counselling National Institute Of Social Development,
Diploma in Child protection National Institute Of Social Development

நன்னடத்தை உத்தியோகத்தர் – தலைமைப்பீடம்,
நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா



**சேவை விபரம்**

- பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை (1992.06.15 – 2002.ஒக்டோபர்)
- பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை (நிர்வாக அலுவலர்) பிரதேச செயலகம் பூநகரி (2002.ஒக்டோபர் – 2009.02.25)
- நன்னடத்தை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரைச்சி (2009.02.25 – 2012. மே)
- நிலையப் பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் முல்லைத்தீவு நீதி-நிர்வாக பிரிவு (2012 மே – 2014.பெப்ரவரி)
- குடும்பங்களை மீள் இணைத்தல் அலகு நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணம் (2014.பெப்ரவரி – 2021 பெப்ரவரி)
- நன்னடத்தை உத்தியோகத்தர், தலைமைப் பீடம், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணம் (2021. மார்ச் – 2025.பெப்ரவரி)

அன்பு, அறிவு பண்பு, பணிவு என
இன் முகத்துடன் இருந்து
முரண்பாடுகளைக் களைந்து
நேர்மையின் சிகரமானவர் – உங்கள்
ஓய்வு எம் திணைக்களத்திற்கு இழப்பே!
உங்கள் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

Best Wishes!

(C-2327)

வாழ்த்துவோர்:
நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாணம்.


### பெண் வேலையாட்கள் தேவை

கோப்பாயில் இயங்கும் தையல் நிலையம் ஒன்றிற்கு தையல் வேலை தெரிந்த, பழக விரும்பும் வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு (C-2328)
**077 918 1090**

### உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு

வயது >30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2330)

### தேவை

- விற்பனை உதவியாளர் (ஆண்)
- மில் உற்பத்திகளை பொதியிடுபவர்கள் (பெண்)

தொடர்புகளுக்கு :
**076 440 0816**
(882)

### வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

### மேற்பார்வையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர்கள் தேவை. கணணி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். நகரை அண்டியவர்கள் தொடர்பு கொள்ளவும். நேர்முகத் தேர்வு 28.02.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00
(C-2324)
**074 0567 791**

### பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்க
**077 327 6502**
(3517)

WESTERN UNION MONEY TRANSFER · DHL · Ria · aramex · MMBL Money Master · Dialog · MoneyGram · Enriching Your Life

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.

SRI MURUGAN
ஸ்ரீமுருகன்
(C-2329)
No.303, K.K.S Road,
Jaffna, Srilanka.
Tel : 0094 21 222 2670 / 5392

### ஆதிசிவன் ஆலயம்
தொல்புரம் கிழக்கு - சுழிபுரம்

**மஹா சிவராத்திரி - 2025**
**26.02.2025 புதன்கிழமை**



சிவனுக்குரிய சிவராத்திரி விரதம் 26.02.2025 புதன்கிழமை எமது ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் : ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ ஆதிசிவ குகன் குருக்கள்

**ARP ஜோதிடம்**
உங்கள் வாழ்க்கைக்குரிய வழிகாட்டும் துல்லியமான பலன்கள், ஜாதகம் எழுத பலன் பார்க்க தொடர்பு கொள்ளுங்கள்.
**074 369 2974, 077 213 3694, 077 614 0849**
(3507)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (877)
**076 825 7716** (ஆகாஸ்)

### குடைச்சுவாமி சேவை நாடி ஜோதிடம்
அன்பானவர்களே

உங்களது வீட்டின் வாஸ்து பார்க்கவும், தீய சக்திகளை இனம் காணவும் சாதக பலன் பார்க்கவும் தொடர்பு கொள்ள அழைக்கவும்.
**077 491 1975, 077 477 9925**
(3503)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகருக்கு அண்மித்த பகுதியில் இரண்டு பேர் வசிக்கக் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:
**075 356 2133**
(C-2323)

### காணி விற்பனைக்குண்டு

நீர்வேலிச் சந்தியில், அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
**074 38 25 961**
**076 91 97 566**
(3509)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] அவர்களது அச்சகத்தில் 25.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org